# ICCP/SL/OP/057

## Intervention related to student hostels being run illegally by private individuals

## தனியாரினால் சட்டவிரோதமாக நடாத்தப்பட்டுவருகின்ற மாணவர் விடுதி தொடர்பான இடையீடு

Rajeevan,K

*National Child Protection Authority, Sri Lanka*

**அறிமுகம்:** பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தராகிய என்னால் சட்டவிரோதமாக நடாத்தப்பட்டு வருகின்ற மாணவர் விடுதி தொடர்பான முறைப்பாட்டை நேரடியாக இடையீடு செய்ததன் மூலம் இனங்காணப்பட்ட சிறுவர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள விடயங்களை எனது ஆய்வு ஆராய்கின்றது. எனது இடையீடு ஊடாக எழுகின்ற பிரதான கேள்வி சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களை மீண்டும் அவர்களுடைய குடும்பத்துடன் மீள் இணைப்பதற்கான பரிந்துரைகளை ஐக்கியநாடுகள் சபை உலக நாடுகளுக்கு வலியுறுத்தி வருகின்ற நிலையில், இலங்கை அரசு சிறுவர் இல்லங்களை படிப்படியாக மூடி வருகின்ற சூழ்நிலையில் மாணவர் விடுதிகள் புதிதாக உருவாகி வருவதை கட்டுப்படுத்த அரசிடம் என்ன பொறிமுறை உள்ளது என்பதாகும்.

**ஆய்வு முறையியல்:** இடையீட்டின் போது அவதானம் மற்றும் பேட்டி மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டம் ஊடாக தகவல்கள் சேகரிக்கப்பட்டது. இடையீட்டின் ஊடாக பின்வரும் விடயங்கள் அடையாளம் காணப்பட்டது. இலங்கையிலோ அல்லது வட மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்திடமோ சிறுவர் இல்லங்களை நடாத்துவதற்கு மட்டுமே சட்ட ஏற்பாடுகள் மற்றும் நியதி சட்டங்கள் உள்ளது. மாணவர் விடுதி தொடர்பாக இலங்கையிலோ அல்லது வட மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்திடமோ சட்ட ஏற்பாடுகள் எவையும் இல்லை. எனவே சட்டத்தின் பிடியில் இருந்து தப்புவதற்கு சிறுவர் இல்லத்துக்கு பிரதியீடாக மாணவர் விடுதிகள் உருவாகி வருகின்றது. என்னால் இடையீடு செய்யப்பட்ட மாணவர் விடுதி எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லாமல் முறையான அரச நிறுவனங்களின் கண்காணிப்பும் இல்லாமல் இயங்கி வருகின்றது. ஒரு மாகாணத்தில் இருந்து இன்னுமொரு மாகாணத்துக்கு சிறுவர்களை முறையான அனுமதி இல்லாமல் உள்வாங்குகியுள்ளனர். சட்டவிரோதமாக உருவாகி வருகின்ற மாணவர் விடுதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய வட மாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தங்களிடம் மாணவர் விடுதி தொடர்பான சட்ட ஏற்பாடு இல்லை என்ற காரணத்தால் சட்டவிரோதமாக உருவாகி வருகின்ற மாணவர் விடுதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பின்னடித்து வருகின்றது.

**ஆய்வு முடிவு:** எனது இடையீடு ஊடாக கண்டறிந்த விடயம் சிறுவர்கள் குடும்ப சூழலுடன் வாழ்வதற்கு அச்சுறுத்தலாக வியாபார நோக்கில் உருவாகி வருகின்ற மாணவர் விடுதிகளை அரசாங்கம் ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தாவிடின் பாடசாலைகளுக்கு நிகராக தனியார் கல்வி நிலையங்கள் உருவாகி உள்ளது போல சிறுவர் இல்லங்களுக்கு நிகராக மாணவர் விடுதிகள் எதிர்காலத்தில் அதிகரிக்கலாம்.

**முடிவுரை:** எனவே அரசாங்கம் சிறுவர் இல்லங்களை படிப்படியாக குறைத்து வருவதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு மேலதிகாக பாடசாலை நிர்வாகம் அல்லாத தனிநபர்கள் மாணவர் விடுதி என்ற போர்வையில் சிறுவர் இல்லங்களை ஆரம்பிப்பதை நிறுத்துவதற்கு புதிய சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே எனது பரிந்துரை ஆகும்.

**திறவுச்சொற்கள்:**சிறுவர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், சிறுவர் பாதுகாப்பு சட்டங்கள்